திரு. சி. கோவிந்தராஜன் : தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள கரும்பு அபிவிருத்தி அதிகாரிகள் மூலமாக கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு இப்படிப்பட்ட உதவி கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தற்சமயம் இல்லை.

Price of Sugarcane

* 204 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the **Minister** for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the South Indian Sugar Mills Association has decided to cut the price paid to sugarcane from Rs. 90 to Rs. 80 per tonne; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) சர்க்கரையின் மீது ஆயத்தீர்வை விதிக்கும் அடிப்படையை மாற்றுவது குறித்து இந்திய அரசு எடுத்த முடிவாலும், வறட்சி நிலைமைகளினால் கரும்பிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் அளவு மிகவும் குறைவாக இருப்பதாலும், வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலை குறைந்துவிட்டதனாலும், கரும்பின் விலையை டன் ஒன்றுக்கு ரூ. 90-லிருந்து ரூ. 80 எனக் குறைக்க சங்கம் முடிவு செய்துள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, விலைவாசியும், வாழ்க்கைச் செலவும், விவசாயக் கூலியும் உயர்ந்து வரும் இந்நாளிலே கரும்புக்கு டன் ஒன்றுக்கு 90 ரூபாய்க்கும் குறைவாகக் கொடுத்தால் அது விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கும். அதிலும், இந்த ஆண்டு அவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். தற்போது சில கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் டன் ஒன்றுக்கு 40 ரூபாயிலிருந்து 50 ரூபாய்வரை கூடக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, உயர்ந்தபட்ச விலை என்று நிர்ணயிப்பதைப்போல, குறைந்தபட்ச விலையையும் நிர்ணயம் செய்ய முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த விலையை மத்திய சர்க்கார் குறிக்கிறது. குறைந்தபட்ச விலை ரூ. 73.70. 'சிஸ்மா' தனிப்பட்டது, எனவே, அது கொடுக்கும் தொகைக்கும், அரசாங்கத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவரவர்களே, இந்த 70 ரூபாய்கூட கிடைக்காமல், வெட்டுக்கூலி, டிரான்ஸ்போர்ட் சார்ஜ் முதலியன செய்தும் 50 ரூபாய்கூட கிடைக்காத நிலை இருக்கிறதே. எனவே, குறைந்தபட்ச விலையை ரூ. 80 என்று ஆக்கினால் வசதியாக இருக்காதா ? மேலும், ஆலைகளுக்கு கரும்பு

கொடுக்க முடியாமல், சொந்தமாக வெல்லம் தயாரித்தால், அதற்கு ஹைட்ரோ சல்பேட்டிற்கு 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை ஆகிறது. எனவே, இதையும் குறைப்பதற்கு வழி செய்ய முடியுமா ? என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மத்திய அரசுதான் மாநிலத்திற்கு மாநிலம் கரும்பினுடைய குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்கிறது. மாநிலத்திற்கு மாநிலம் இந்த விலை மாறுபடுகிறது. தமிழ்நாட்டில் குறைந்தபட்ச விலை ரூ. 73.70. இதற்குக் குறைந்து ஆலைச் சொந்தக்காரர்கள் வாங்கக் கூடாது என்பது சட்டம். ஆனால், அப்படி வாங்குகிறார்கள் என்று சொன்னால், அதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மேற்கொண்டு மத்திய அரசு அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு மத்திய அரசுக்கு சிபார்சு செய்யலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, குறைந்த பட்ச விலை ரூ. 73.70 என்று சொல்லப்படுகிறது. மதுரை மாவட்டத்தில், அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 40 ரூபாயிலிருந்து 50 ரூபாய்வரை கொடுக்கிறார்கள். இதை உயர்த்திக்கொடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சரவர்கள் சொல்லியபடி, சில ஆலைகளில் குறைவாகக் கொடுக்கிறார்கள் என்று அரசாங்கத்திற்கு தகவல் வரவில்லை. அப்படி வந்தால் கவனிக்கலாம். சேலம் கோவாப்பரேட்டிவ் ஷுகர் மில்லில் 90 ரூபாய் ; நார்த் ஆர்க்காட் கோவாப்பரேட்டிவ் ஷுகர் மில்லில் 90 ரூபாய். குறைவாக வாங்குகிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகிறார்கள். அதுபற்றி அரசாங்கத்திற்கு எந்தவிதமான புகாரும் இல்லை. ஏற்கெனவே, ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. 12—6—1969-ல் இறுதி பாகக் கூட்டம் கூட்டப்பட்டு, குறைந்தபட்ச விலை மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 73.70 என்று அதைத்தான் ஒத்துக்கொண்டார்கள். ரூ. 76 என்பதைக் கூட ஒத்துக்கொள்ளக் கூடாது என்ற அளவில் பரிசீலனை செய்யப்பட்டு, யாரும் ஒத்துக் கொள்ளவில்லை. எனவே, அப்படிக் குறைந்தபட்ச விலையில் எடுக்கப்பட்டதாக எந்தவிதப் புகாரும் இல்லை.

Milk production

* 205 *Q*.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state whether the Commissioner for Milk Production, Madras is preparing a Master plan for stepping up milk production in an organised way in the districts of Thanjavur and Tiruchirappalli ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தஞ்சாவூர் மாவட்டத்திற்காக மட்டுமே பால் பெருக்க-கால்நடை மேம்பாட்டு ஆணையாளர் பால்பண்ணைச் செயல்முறைத் திட்டம் ஒன்றைத்